# வேலணை மத்திய கல்லூரியிலுள்ள நடராஜப் பெருமான் திருக்கோவில் புனருத்தானம்





ஈழமணித் திருநாட்டின் வடபால் யாழ்ப் பாணத் தீபகற்பத்தின் தென்மேற்குப் பகுதியில் அமைந்துள்ள வேலணை மத்திய கல்லூரி வளாகத்தில் கோவில் கொண்டு எழுந்தருளி அருள்பாலித்துக் கொண்டிருக்கும் சிவகாமி அம்பாள் சமேத நடராஜப் பெருமான் ஆலயப் புனருத்தாரண வேலைகள் தாயகத்திலும் புலம்பெயர் நாடுகளிலும் வசிக்கும் கல்லூரியின் பழைய மாணவர்களின் நிதியுதவியுடன் அதிபர் திரு சி. கிருபா கரன் அவர்களது அயராத முயற்சியில் துரிதகதியில் நடைபெற்று வருகின்றன.

கடந்த 09-09-2015 புதன்கிழமை அன்று பாலஸ்தாபனம் நடைபெற்ற பின்னர் புனருத்தாரண வேலைகள் ஆரம்பிக்கப் பட்டது. மேலும் புதுவருடத் தைப்பூசத் திருநாளில் கும்பாபிசேகம் நடைபெறத் திருவருள் கூடியிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இத்திருப்பணிக்குப் பழைய மாணவியும் முன்னாள் ஆசிரியர் மற்றும் பிரதி அதிப ருமான திருமதி திருமகள் கேதாரநாதன் அவர்களது பங்களிப்பும் அனுசரணை யும் மெச்சத்தக்க வகையில் அமைந்தி ருப்பது மிகவும் பாராட்டுக்குரியதாகும்.

ஆலயத்தையும் கல்லூரியின் பிரதான பிரார்த்தனை மண்டபத்தையும் இணை க்கும் வண்ணம் கொங்க்றீற்றினாலான வில்லுமண்டபம் அமைக்கும் திருப்பணி வேலைகள் ஏறத்தாழப் பதினைந்து இலட்சம் ரூபா மதிப்பீட்டில் நடை பெற்று வருவதனைக் கல்லூரி நிர்வாக த்தின் சார்பிலும் எமது சங்கத்தின் சார் பிலும் அனைத்துப் பழைய மாணவர் களுக்கும் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி யடைகின்றேன்.

***சி. இளஞ்செழியன் (தலைவர்)***

***வேலணை மத்திய கல்லூரிப் பழைய மாணவர் சங்கம்-கனடா***

